இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

வருடாந்த அறிக்கை - 2015

பொருளடக்கம்

தலைப்பு	பக்க இலக்கம்
தொலைநோக்கு, செயற்பணி	3
பணிப்பாளர் சபை	4
தலைவரது மீளாய்வு	6
சபை பற்றிய தகவல்கள்	7
ஒட்டுமொத்த செயலாற்றுகை2015	8
வருடாந்த கணக்குஅறிக்கை	12
கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை	31

வருடாந்த அறிக்கை - 2015

<u>தொலைநோக்கு</u>

விவசாய சமூகத்தினரினதும் குறைந்த வசதிகளுடைய மக்களினதும் கௌரவத்தை மீள உருவாக்கும் நோக்கில் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதன்மூலம் பொருளாதார சுயாதீனத்தையும் சுய நம்பிக்கையையும் உருவாக்குதல்.

<u>செயற்பணி</u>

பயனாளிகளின் பொருளாதார சுயாதீனத்தை ஏற்படுத்தும் பொருட்டும், பிறரில் சார்ந்திருக்கும் கலாசாரத்திலிருந்து விடுவிக்கும் பொருட்டும் விவசாய, கால்நடை மற்றும் ஏனைய துறைகளின் திறன் அபிவிருத்தி பொருட்டும் பங்குகொள்ளும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்.

2015ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபை

பெயர்	பதவி	சேவை நிலையம்
திரு.தம்மிக பீரிஸ்	தலைவர்	இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை
திரு.ரவி கிஷான் ஜயவர்தன	உப தலைவர்	இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை
திரு.டி.எம்.எல்.பண்டாரநாயக்க	மேலதிக செயலாளர்(அபிவிருத்தி)	பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு
திருமதி.டப்.எம்.தீப்தி பர்னாந்து	மேலதிக செயலாளர்(உள்நாட்டு அலுவல்கள்)	உள்நாட்டு அலுவல்கள் மற்றும் கடற்றொழில் அமைச்சு
திரு.பி.எஸ்.எஸ்.விஜேரத்ண	சிரேட்ட உதவி செயலாளர்	நீர்ப்பாசன மற்றும் கமத்தொழில் அமைச்சு
திரு.எச.ஜீ.ஜீ.ஜே.தர்மசேன	பணிப்பாளர் நாயகம்	மனித வலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்
திருமதி.எம்.எப்.கே.நிஷா	உதவி செயலாளர்	தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம்
திரு.விஜயசிறி விக்ரமசிங்க	பணிப்பாளர் சபை உறுப்பினர்	இல. 409/3சீ, மகய்யாவத்த, கலபுவாவ, முல்லேரியா நகரம்
திரு.பி.டப்.தர்மசிறி வெலிகல	பணிப்பாளர் சபை உறுப்பினர்	இல.95,பண்டாரநாயக்க மாவத்தை, மிஹிதுபுர. அனுராதபுரம்.
திரு.ஏ.ரீ.எம்.ஏக்கநாயக்க	பணிப்பாளர் சபை உறுப்பினர்	இல. 121, யசசிறிபுர. அனுராதபுரம்.
திரு.கிஷான் நிலங்க	பணிப்பாளர் சபை உறுப்பினர்	898/ ஏ4, தியதெர, பகலவெல வீதி, பெல்வத்த

2015ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடைபெற்ற திகதிகள்

363ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம் - 2015.03.19

364ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம் - 2015.06.30

365ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம் - 2015.10.09

366 ஆவது பணிப்பாளர் சபைக்கூட்டம் - 2015.12.30

2015ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபை கூடிய நாட்களின் எண்ணிக்கை = 04

தலைவரது மீள்நோக்கு

தேசிய உணவு ஊக்குவிப்புச் சபையின் தலைவர் என்ற வகையில் 2015ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை பொருட்டு நுண்ணாய்வுமிக்க செயலாற்றுகையை சமர்ப்பிப்பதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.
அதிமேதகு மைத்திரிபால சிறிசேன சனாதிபதி அவர்களின் நஞ்சற்ற உள்ளூர் விவசாய பொருளாதாரத்தின்மூலம் விவசாயத்துறையின் நிலைபேறான அபிவிருத்தி எனும் எண்ணக்கருவினை முதலாகக் கொண்டு நஞ்சற்ற சுகாதாரமிக்க தேசிய உணவுகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் இதன் பொருட்டான கௌரவ கமத்தொழில் அமைச்சர் துமிந்த திசாநாயக்க அவர்களின் வழிகாட்டலும் ஆசிர்வாதமும் பெரிதும் மெச்சத்தக்கன.

எமது சபை 2015ஆம் ஆண்டில் பின்வரும் பிரதான செயற்றிட்டங்களை மேற்கொண்டது.

1. மவ்போஷ மற்றும் சுவபோஷ போசணை உணவு தயாரிப்பும் மேம்படுத்தல் செயற்றிட்டமும்.
2. புத்தல மற்றும் தணமல்வில பண்ணைகளின் அபிவிருத்திசெயற்றிட்டம்.
3. விவசாயி உற்பத்தி விற்பனைக்கூட செயற்றிட்டம்.
4. நஞ்சற்ற எமது உணவு – ஹெல்தி புட் செயற்றிட்டம்.
5. உள்ளூர் பாரம்பரிய அரிசி உற்பத்தி மற்றும் நுகர்வினை பிரபல்யப்படுத்தும் செயற்றிட்டமும்.
6. சோயா கலந்த விசேட அரிசி மா உற்பத்தி முன்னோடி செயற்றிட்டம்.
7. குரக்கன் சீரியல் பிளேக்ஸ் முன்னோடி செயற்றிட்டம்.

மேற்குறிப்பிட்ட பிரதான செயற்றிட்டங்களுக்கு மேலதிகமாக, தற்கால தேவைகளுக்கு ஏற்றவகையில் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் உச்ச நியாயத்தை வழங்கும் முகமாக தெகிவளை மற்றும் நாரஹேன்பிட்டி விவசாயி உற்பத்தி விற்பனைக்கூடங்கள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின்மூலம் நகர்வாழ் மக்களுக்கு பல நன்மைகள் வழங்கப்பட்டன.அத்துடன்,தெகிவளை மற்றும் நாரஹேன்பிட்டி நகர பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ளநாற்றுமேடைகள் மூலம் நகரவாசிகள் பொருட்டு குறைந்த இடவசதியுடன் உச்ச விளைவை பெறும்வகையில் விவசாய பயிர்செய்கையிடும் முறைகள் மற்றும் மரக்கறி, பூ வகைகள்,மூலிகைக் கன்றுகள்,பழக் கன்று வகைகள் போன்றனவற்றை சலுகை விலையில் வழங்குவதற்கும்,செய்கை பண்ணுவதற்கும் தேவையான அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

கலன்குட்டிய மற்றும் கன்னோறுவையில் அமைந்துள்ள எமது உற்பத்திசாலைகள் மூலம் நஞ்சற்ற உள்ளூர் அரிசி, தோசை மா, விசேட அரிசி மா, மவ்போஷ, சுவபோஷ, சிசுபோஷ போன்ற தயாரிப்புகளை சந்தைக்கு வழங்கக்கூடியதாக உள்ளது.

நஞ்சற்ற சுகாதாரமிக்க உள்ளூர் அரிசியையும் பாரம்பரிய அரிசியையும் மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்கும் அதன்மூலம் விவசாயிகளுக்கு அதிக வருமானத்தை பெற்றுக்கொடுத்தல் இடம்பெறுகிறது. அத்துடன்,எமது தானிய உற்பத்திகளான மவ்போஷ, சுவபோஷ,விசேட அரிசி மா கலவை, விசேட தோசை மா கலவை என்பனவற்றை சந்தைக்கு வழங்குவதன்மூலம் எமது மக்களின் போசணை மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு பங்களிப்பு வழங்கியுள்ளது.

மேலும், பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்களினால் புதிய போசணைமிகு உணவு வகைகள் கண்டுபிடிக்கப்படுகின்ற போதிலும் அவற்றை மேம்படுத்தும் முகமாக அரச நிறுவனம் எதுவும் முன்வராமை கவலைக்குரிய விடயமாகும். அதற்கிணங்க, குறித்த பணியை நிறைவேற்றும் ஆரம்ப படிநிலையாக குரக்கன் கலந்த சீரியல் பிளேக்ஸ மற்றும் சோயா கலந்த விசேட அரிசி மா அறிமுகப்படுத்தப்பட்டன. இவை தொடர்பில் கமத்தொழில் திணைக்களத்தின் உணவு ஆராய்ச்சி அலகினால் பரிசோதனை நடாத்தப்பட்டிருந்தது. இத்தகைய செயற்றிட்டங்களை தொடர்ந்து மேற்கொண்டு மக்களுக்குத் தேவையான போசணைமிக்க நஞ்சற்ற உணவுகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், இந்தப் பணிகளை விரிவுபடுத்தி எதிர்காலத்தில் நஞ்சற்ற உணவு உற்பத்தியை மேம்படுத்துவதற்கும் புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கும் அவற்றை மக்களிடையே இலகுவாக கிடைக்கச் செய்வதும் அதன்மூலம் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் பயன் கிடைக்கச்செய்தல் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

தம்மிக பீரிஸ்
தலைவர்,
தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை.

(இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை)

சபை பற்றிய தகவல்கள்

சபையின் பெயர்:
தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை (முன்பு இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை)

சட்ட உருவரைச்சட்டகம் மற்றும் அமைவிடம்

1973ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க (இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு சட்டத்தின்மூலம் தாபிக்கப்பட்டது. 2009ஆம் ஆண்டில் தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை என பெயர் மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. பிரதான அலுவலகம் இல.45, கிரிமண்டல மாவத்தை, கொழும்பு 5 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

பிரதான செயற்பாடுகளும் குறிக்கோள்களும்
பிரதானமாக பொருளாதாரரீதியாக பாதிப்புற்ற மக்களுக்கு சேவையாற்றும் நிறுவனம். அதன் குறிக்கோள்களாவன:

- அரசாங்கத்தினால் தயாரிக்கப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணங்க சமூக, பொருளாதார அபிவிருத்தி பொருட்டு உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற முகவராண்மைகளின் நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளுதல்.
- பொது வசதிகள், சமூக நலனோம்பல், பொருளாதார அபிவிருத்தித்திட்டங்களை செயற்படுத்துகையில் நிறுவனங்களுக்கும் பிற சபைகளுக்கும் உதவுதல்.
- விவசாய,கைத்தொழில் அபிவிருத்திபால் ஈடுபடுத்தப்பட்ட குறித்துரைத்த செயற்றிட்டங்களுக்கு நன்கொடை வழங்குதலும் மேம்படுத்தலும், ஒருங்கிணைப்பு செய்தலும்.
- விவசாய, கைத்தொழில் உற்பத்திகளை அதிகரிப்பதற்காக செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அரச சார்பற்ற முகவராண்மைகளை மதிப்பீடு செய்தல்.
- சருவதேச பட்டினி ஒழிப்பு இயக்கம் மற்றும் ஏனைய அதற்குச் சமமான வெளிநாட்டு நிறுவனங்கள், சங்கங்கள் அல்லது சமூகங்களுடன் ஒத்துழைத்தல்

வரிசை அமைச்சு
கமத்தொழில் அமைச்சு

அலுவலகம்
இல.45,கிரிமண்டல மாவத்தை,கொழும்பு 5.

தொலைபேசி : 0112506895
தொலைநகல் : 0112506907
மின்னஞ்சல் : ffhc.srilanka@gmail.com

கணக்காய்வாளர்
கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம்

வங்கியாளர்கள்
இலங்கை வங்கி – பொரளை
மக்கள் வங்கி – தெகிவளை

தந்திரோபாயங்கள்

- அபிவிருத்தி முன்னெடுப்புக்களை ஒரு பொது குறிக்கோள்பால் ஒன்றிணைத்தல்.
- பொருளாதார வளர்ச்சி, சமூக, கலாசார அபிவிருத்திகளில் பங்குபற்றுவதற்காக கிராமிய மக்களுக்கு வாய்ப்பு வழங்குதல்.
- அபிவிருத்தி செயன்முறையில் முழுமையாக பங்குபற்றும் பொருட்டு கிராமிய மக்களை வலுவூட்டுதல்.
- சுயமாக முன்னோக்கிச் செல்லும் நீடித்த அபிவிருத்தியை ஏற்படுத்தும் பொருட்டு சாதனை நோக்கிய விழுமியங்களுடனான சுய நம்பிக்கைக்கும் இயலுமைக்கும் பாரம்பரிய கிராமிய மக்களை மாற்றுதல்.
- உள்நாட்டு உணவு உற்பத்தியையும் பாவனையையும் ஊக்குவித்தல்.
- அறுவடைக்கு பிந்திய சேதத்தை குறைக்கும் தொழினுட்பத்தை அடி மட்டத்திற்கு கொண்டுசெல்லல

ஒட்டுமொத்த செயலாற்றுகை- 2015

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையானது, 2015ஆம் ஆண்டில் 09 செயற்றிட்டங்களை மேற்கொண்டுள்ளதுடன், இந்தச் செயற்றிட்டங்களின் சுருக்கமான விபரங்கள் கீரே தரப்பட்டுள்ளன.

1. தாவரக்கன்று விற்பனைக்கூடம் – நாரஹேன்பிட்டி

நகர்வாழ்மக்களிடையே வீட்டுத்தோட்ட செய்கையை பிரபல்யப்படுத்தும் பொருட்டுதேவையான பொருள்களை சலுகை விலையில் கொள்வனவு செய்வதற்கு வசதியளிக்கும் முகமாக இந்த விற்பனைக்கூடம்நாரஹேன்பிட்டிபிரதான அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. எல்லா வகையிலான பூக் கன்றுகள்,அரிதாகக் கிடைக்கக்கூடிய பழக்கன்றுகள், மரக்கறி கன்றுகள் மற்றும் விதை வகைகள் போன்றனவற்றை இந்தநாற்று மேடையிலிருந்து விலைக்குவாங்க முடியும்.

இதற்கு மேலதிகமாக, மரக்கறி மற்றும் பூ பசளைகள்,சேதனப் பசளை,பூச்சி விலக்கி,விவசாய உபகரணங்கள்என்பனவற்றை இந்த நிலையத்திலிருந்து விலைக்கு வாங்கலாம். அத்துடன், பயிர் செய்கை சம்பந்தமான அறிவுரைகளையும் இந்த நிலையத்திலிருந்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். இந்தஆண்டில் இச்செயற்றிட்டம் பொருட்டானசெயற்பாட்டு செலவினம் ரூ.7.085மில். ஆக இருந்ததுடன் செயற்பாட்டுவருமானமாகரூ.7.828 மில். ஈட்டப்பட்டிருந்தது. அத்துடன், ஆண்டில் தேறிய இலாபம் ரூ. 1.346 மில். ஆகும். இத்தரவுகளின்படி, இச்செயற்றிட்டம் கடந்த ஆண்டினை விட முன்னேற்றத்தை கண்டுள்ளது.

2. விவசாய உற்பத்திப்பொருள் விற்பனைக்கூடம் – தெகிவளை

மக்கள் மத்தியில் நஞ்சற்ற உணவுகளை பிரபல்யப்படுத்தும் நோக்குடன் இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த விற்பனைக்கூடத்தின்மூலம் தேசிய உற்பத்தியாளர்களினால் தயாரிக்கப்பட்ட உணவு உற்பத்திகள், பாரம்பரிய அரிசி வகைகள் அத்துடன் எமது நிறுவனத்தால் உற்பத்திசெய்யப்படும் மவ்போஷ, சுவபோஷ, தோசை மா, விசேட அரிசி மா என்பனவற்றை விலைக்கு வாங்க முடியும். இதற்கு மேலதிகமாக,தேசிய முறையில் தயாரிக்கப்பட்ட காலை மற்றும் மதிய உணவுகளை சலுகை விலையில் வாங்குவதற்கு வசதி செய்துகொடுக்கப்பட்டுள்ளது. தெகிவளைமிருகக்காட்சிசாலையினுள்ளும் இத்தகைய விற்பனைக்கூடம் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த விற்பனைக்கூடத்தின்மூலம் பிரதேச மக்களுக்கு பெரும் சேவை வழங்கப்படுகிறது. இந்தஆண்டில் இச்செயற்றிட்டத்தின் செயற்பாட்டுவருமானம்ரூ.44.427 மில். செலவினம் ரூ.43.079மில்.ஆகும்.அதன்படி, ஆண்டின் தேறிய இலாபம் ரூ. 1.449 மில். ஆகும்.

3. புத்தல பண்ணை அபிவிருத்தி

இச்செயற்றிட்டம் 1986ஆம் ஆண்டில ஆரம்பிக்கப்பட்டதுடன் மாதிரி செய்கையாகஆராய்ந்து பார்க்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது.2014 யூன் மாதம் வரையில் நிறுவனம் பணம் முதலீடுசெய்து பண்ணை செய்கைகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை 2015 ஆகஸ்ட் மாதத்தில் புத்தல பண்ணை அபிவிருத்திபொருட்டு ரூ.1.9443 மில். தொகை கமத்தொழில் அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்றது. குறித்த தொகையில் ரூ.1.0173 மில். செலவுசெய்து பண்ணையை காட்டு யானைகளிடமிருந்து பாதுகாப்பதற்காக மின்சார வேலியொன்று அமைக்கப்பட்டது.

எஞ்சிய தொகையில் 3 1/2 ஏக்கரில் சோளம் செய்கை ஆரம்பிக்கப்பட்டது.அதன் அறுவடையாக 2015 சனவரி மாதத்தில் 4550 கி.கி. சோளம் பெறப்பட்டதுடன் அதனை விற்பனை செய்வதன்மூலம் ரூ.150,018.00வருமானம் ஈட்டப்பட்டது. அத்துடன்,ரூ.0.4739 மில். செலவு

செய்து 2 விவசாயக் கிணறுகள் புனரமைக்கப்பட்டன. மேலும், கத்தரிக்காய், போஞ்சி, தக்காளி, வெண்டிக்காய் போன்ற மரக்கறி வகைகள் சிறியளவில் செய்கைபண்ணப்பட்டு அறுவடையை விற்பதன்மூலம் ரூ.0.095 மில்.ஈட்டப்பட்டது.

இதற்கு மேலதிகமாக,புத்தல பண்ணையில் மேற்கொள்ளப்பட்ட சேதன பசளை உற்பத்தியை விற்பதன்மூலம் ரூ.0.27 மில். வருமானம் ஈட்டப்பட்டதுடன், இச்செயற்றிட்டம் இலாபம் ஈட்டும் நோக்கத்தில் அல்லாது மக்களுக்கு பெரும் சேவையை வழங்கும் முகமாக முன்னெடுக்கப்பட்டது. இவ்வருடத்தில் இந்தச்செயற்றிட்டத்தின் செயற்பாட்டுவருமானம்ரூ.0.463 மில். ஆக இருந்ததுடன் செலவினம் ரூ.1.44 மில். ஆகும்.

4. தணமல்வில பண்ணை அபிவிருத்தி

தணமல்வில பண்ணையும்மாதிரி செய்கையாகநீண்ட காலமாக பேணப்பட்டுவரும் பண்ணையாகும்.
2014 ஆகஸ்ட் மாதம்வரையில் நிறுவனம் பணம் செலவழித்து பாரம்பரிய நெல் வகைகளை இப்பண்ணையில் செய்கைபண்ணியது. 2015ஆம் ஆண்டில் ரூ.1.39 மில்.கிடைக்கப்பெற்றதுடன் அத்தொகையில் ரூ.0.34 மில்.செலவு செய்து 01 விவசாயக் கிணறு புனரமைக்கப்பட்டது. அத்துடன்,ரூ.0.141 மில். செலவு செய்து சுவந்தல் நெல் செய்கை பண்ணுவதன்மூலம் அறுவடையாக நெல் 3100 கி.கி. பெறப்பட்டதுடன் வருமானமாக ரூ.0.217 மில்.ஈட்டப்பட்டது. முருங்கை, சோளம்,பூசனிக்காய் போன்ற பயிர் வகைகள் சிறியளவில் செய்கைபண்ணப்பட்டன.

.

5. நாற்று மேடை–தெகிவளை

நகர மக்களுக்கு வீட்டுத்தோட்ட அபிவிருத்தி பொருட்டு தேவையான அனைத்து பொருள்களையும் சலுகை விலையில் வழங்குவதற்காக இந்த நாற்று மேடை ஆரம்பிக்கப்பட்டது. இந்த நாற்று மேடையிலிருந்துஎல்லா வகையிலான பூக் கன்றுகள்,அரிதாகக் கிடைக்கக்கூடிய பழக்கன்றுகள், மரக்கறி கன்றுகள் மற்றும் விதை வகைகள் போன்றனவற்றை இந்தநாற்று மேடையிலிருந்து விலைக்கு வாங்க முடியும். இதற்கு மேலதிகமாக, மரக்கறி மற்றும் பூ பசளைகள், சேதனப் பசளை,பூச்சி விலக்கி, விவசாய உபகரணங்கள்என்பனவற்றை இந்த நிலையத்திலிருந்து விலைக்கு வாங்கலாம். இவ்வருடத்தில் வருமானமாகரூ.3.417 மில். ஈட்டப்பட்டிருந்ததுடன் ரூ.3.33 மில். செலவிடப்பட்டிருந்தது.

6. சோயா சார்ந்த உற்பத்திகளை தயாரிக்கும் செயற்றிட்டம்

இது நீரிழிவு உள்ளிட்ட தொற்றாத நோய் கட்டுப்பாட்டுக்காக கோதுமை மா நுகர்வினை குறைத்தல் மற்றும் சோயா சார்ந்த உற்பத்திகளைமக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தி மக்களின் போசணை மட்டத்தை மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட ஆராய்ச்சிரீதியிலான செயற்றிட்டமொன்றாகும்.இந்த ஆராய்ச்சி நடவடிக்கைகள் கமத்தொழில் திணைக்களத்துக்குரிய கன்னோறுவை உணவு ஆராய்ச்சி அலகில் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக ரூ.4 மில்.

செலவிடப்பட்டிருந்தது. தற்போது தனியார் பங்குடமையுடன் இந்த உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்காக ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

7.ஹெல்தி புட் உணவகம் - நாரஹேன்பிட்டி

இந்தச் செயற்றிட்டமானது 2014.04.01ஆம் திகதியில் நகர்வாழ்நுகர்வோர்களுக்கு சலுகை விலையில் தேசிய உணவுகளை வழங்குவதனை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.இங்கு தேசிய உணவுபட்டியலுக்கு ஏற்ப உணவுகள்தயாரிக்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக,நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட உணவுஉற்பத்திகளும் அத்துடன் சிறிய, நடுத்தர முயற்சியாளர்களினால் தேசிய உற்பத்திகளும் விற்பனை செய்யப்படுகின்றன. 2015ஆம்ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் செயற்பாட்டுவருமானம்ரூ.14.936 மில். ஆக இருந்ததுடன் செயற்பாட்டுசெலவினம் ரூ.19.154மில்.ஆகும்.
அத்துடன்,இச்செயற்றிட்டத்திற்குரிய 2015ஆம்ஆண்டில் தேறிய நட்டம் ரூ. 4.218 மில். ஆகும். குறித்த நட்டத்தை2016ஆம் ஆண்டில் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது..

8 .சுவபோஷ போசாக்கான உணவு,அரிசி மா, தோசை மா, மவ்போஷ செயற்றிட்டம்

பெருந்தோட்டப்பகுதியில் அரிசி மா பாவனையை பிரபல்யப்படுத்தும் நோக்கில் அரிசி மா மற்றும் தோசை மா செயற்றிட்டம்ஆரம்பிக்கப்பட்டதுடன், இச்செயற்றிட்டம் கலன்குட்டிய தொழிற்சாலையினுள் செயற்படுத்தப் படுகின்றது. அரிசி மா, தோசை மா செயற்றிட்டம்நிறை குறைந்த கர்ப்பிணிப் பெண்களுக்கு போசாக்குப் பொதி வழங்கும் செயற்றிட்டம் மஹிந்த சிந்தனை எண்ணக்கருவின்படி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த உற்பத்திநடவடிக்கைகள் கமத்தொழில் திணைக்களத்துக்குரிய கன்னோறுவை உணவு ஆராய்ச்சி அலகிலும் கலன்குட்டிய தொழிற்சாலையிலும் தயாரிக்கப்படுகின்றன. 2014 ஆண்டு இறுதி வரையில் இந்த உற்பத்தி பொருட்டு திவிநெகும திணைக்களத்திலிருந்து நிதியேற்பாடு கிடைக்கப்பெற்றதுடன், தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களிலுள்ள சமுர்த்தி வங்கிகள் ஊடாக பகிர்ந்தளிக்கப்பட்டன. 2015ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தினால் நிதியேற்பாடு கிடைக்கப்பெறாமையினால் இந்த உற்பத்திகள் எமது நிறுவனத்தின் காட்சியறைகள் மற்றும் ஹெல்தி புட் ஷொப் பொருட்டு மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டன.

10. திறைசேரி நிதியேற்பாடுகள்

	வரவுசெலவுத்திட்ட நிதியேற்பாடு 2014 (ரூ.மில்.)	பெற்ற மானியம் (ரூ.மில்.)	உண்மையான செலவினம் (ரூ.மில்.)	மிகை செலவினம் (ரூ.மில்.)
மீண்டுவரும் செலவு	46.1766	37.274	42.772	3.403
மூலதனச்செலவு	5.00	5.0	5.04	(0.039)
மொத்தம்	51.1766	42.274	47.81	3.364

வருடாந்த கணக்கு அறிக்கை- 2015

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

இந்த நிதி நிலமைக்கூற்று மற்றும் நிதிச் செயலாற்றுகைக்கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருப்பதுடன் இலங்கை அரச சேவையின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வரலாற்றுக் கிரய எண்ணக்கரு அடிப்படையிலும் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

கணக்கீட்டுக் கொள்கைகள் :

1. சொத்துக்களின் புதிய கொள்வனவானது, கொள்வனவுசெய்யப்பட்ட பெறுமதியிலும் (கிரயத்தில்) ஏனைய சொத்துக்கள் மறுபடி விலைமதித்தல் பெறுமதியிலும் (சாதாரண பெறுமானத்தில்) காட்டப்பட்டுள்ளன.

மறுபடி விலைமதிக்கப்பட்ட சொத்துக்கள், அவற்றின் பயன்பாட்டு ஆயுட்காலம் முழுவதும் தேய்மானம் இடப்படுவதுடன் மறுபடி விலைமதித்த திகதிக்கு முன்னர் இருந்த பெறுமதிகள் பின்வரும் தேய்மான வீதங்களுக்கு ஏற்ப தேய்மானம் செய்யப்பட்டுள்ளன.

சொத்துக்கள் கொள்வனவுசெய்யப்பட்ட திகதி முதல் மறுபடி விலைமதிக்கப்பட்ட திகதி வரையில் பின்வரும் தேய்மான வீதங்களுக்கு ஏற்ப தேய்மானம் கணக்கிடப்பட்டுள்ளது.

தேய்மான வீதங்கள்

காணியும் கட்டடமும்	5%
மோட்டார் வாகனம்	20%
தளபாடமும் பொருத்துக்களும்	10%
பொறித்தொகுதியும் இயந்திரமும்	20%
புகைப்பட சினிமா உபகரணம்	10%
விவசாய உபகரணங்கள்	20%
தோட்ட உபகரணங்கள்	10%
பிற உபகரணங்கள்	20%
அலுவலக உபகரணம்	10%
சிறு உபகரணங்கள், அளவை உபகரணம்	20%
தற்காலிக கட்டடம்	5%
கணினியும் மென்பொருளும்	20%

2. பெற வேண்டிய மீதிகள், அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடன் என்பன பொருட்டு ஒதுக்கப்பட்ட பின்னர் தேறியதாக பெறப்படத்தக்க தொகைகளில் குறிப்பிடப்படுகின்றன.

3. இனங்காணப்பட்ட எல்லா பொறுப்புக்கள் பொருட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

4. பணிக்கொடை ஏற்பாடானது ஒவ்வொரு ஊழியரும் பணிக்கொடைக்கு உரித்தான வருட எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

5 அறிந்த எல்லா பொறுப்புக்கள் பொருட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்ட பின் செலவிலும் மிஞ்சிய வருமானம் கணக்கிடப்பட்டுள்ளது.

6 கொள்விலை மற்றும் தேறப்பட்ட பெறுமதி ஆகிய பெறுமதிகளில் மிகவும் குறைந்த பெறுமதியிலேயே இருப்பு கணக்கிடப்படுகிறது என்பதுடன் பின்வரும் இருப்புகள் பொருட்டான கிரயம் கீழே குறிப்பிடப்பட்ட முறைகளின் கீழ் கணக்கிடப்படுகிறது.

   a. மூலப்பொருள் - முதல் பெற்று முதல் விநியோகித்தல் முறையில் உண்மையான கிரயத்தில் காட்டப்படுகிறது.
   b. குறை வேலை இருப்பு – நேர் மூலப்பொருள் கிரயத்தில் காட்டப்படுகிறது.
   c. முடிவுப்பொருள் இருப்பு – நேர் மூலப்பொருள், மாறும் மேந்தலைச் செலவு மற்றும் நேர் சம்பள உண்மையான கிரயத்தில் காட்டப்படுகிறது.
   d. பாவனைப்பொருள்கள் - உண்மையான கிரயத்தில் காட்டப்படுகிறது.

7. அரசிடமிருந்து பெற்ற நிதியேற்பாடு வருமானக் கூற்றில் வருமானமாக பிரத்தியேகமாகவும்,செலவு விடயமாக பிரத்தியேகமாகவும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

1. இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை 2015ஆம் ஆணடில் பின்வரும் அபிவிருத்தி செயற்றிட்டங்களை மேற்கொண்டது.

செயற்றிட்டம்	நிதியளிக்கப்பட்டது	செயற்றிட்ட அமைவிடம்
பண்ணை அபிவிருத்தி - தணமல்வில	சுய நிதியம் மற்றும் கமத்தொழில் அமைச்சு	தணமல்வில
பண்ணை அபிவிருத்தி – புத்தல	சுய நிதியம் மற்றும் கமத்தொழில் அமைச்சு	புத்தல
எக்ஸ்குர்ட் பிளேக் விருத்தி	கமத்தொழில் அமைச்சு	கன்னோறுவை
சோயா சார்ந்த அரிசி மா உற்பத்தி	கமத்தொழில் அமைச்சு	கன்னோறுவை
உள்ளுர் அரிசி செயற்றிட்டம்	கமத்தொழில் அமைச்சு	கலன்குட்டி
நாற்று மேடை - பிரதான அலுவலகம்	சுய நிதியம்	நாரஹேன்பிட்டி
பண்ணை அபிவிருத்தி - அம்பலாந்தோட்டை	சுய நிதியம்	அம்பலாந்தோட்டை
பெருந்தோட்டப்பகுதியில் அரிசி மா பாவனையை மேம்படுத்தும் வேலைத்திட்டம்	சுய நிதியம்	கலன்குட்டி
சுவபோஷ போசாக்குப் பெக்கற்	சுய நிதியம்	கன்னோறுவை
மவ்போஷ போசாக்குப் பெக்கற்	சுய நிதியம்	கன்னோறுவை
சேதனப் பசளை பிரயோகத்தை மேம்படுத்தல்	சுய நிதியம்	புத்தல
விவசாயி உற்பத்திப்பொருள் விற்பனைக்கூடம் – தெகிவளை	சுய நிதியம்	தெகிவளை
ஹெல்தி புட் உணவகம்	சுய நிதியம்	நாரஹேன்பிட்டி

2. பின்வரும் வங்கி நடைமுறைக் கணக்குகள்இந்தஆண்டில் இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்தன.

194125 - திறைசேரியிலிருந்து பெறும்நிதியேற்பாடு

கமத்தொழில் அமைச்சிலிருந்து பெறும் நிதியேற்பாடு, பண்ணை அபிவிருத்தி–புத்தல,பண்ணை அபிவிருத்தி -தணமல்வில,அம்பலாந்தோட்டை பண்ணை,சுவபோஷ செயற்றிட்டம், மவ்போஷ செயற்றிட்டம், பெருந்தோட்டப்பகுதியில் அரிசி மா பாவனையை மேம்படுததும் செயற்றிட்டம், நாற்று மேடை, தெகிவளை, விற்பனைக்கூடம், ஹெல்தி புட் உணவகம்,கொம்போஸ்ட் செயற்றிட்டம்.

138295 - தெகிவளைவிற்பனைக்கூடத்தின் வருமானம்

2இ ஒவ்வொரு செயற்றிட்டம் பொருட்டு பிரத்தியேக பேரேகள் பேணப்படுகின்றன.

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை
2015 திசம்பர் 31இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்று

விபரம்	குறிப்பு	2015ரூ.	2014ரூ.
சொத்துக்கள்			
நடைமுறையல்லாத சொத்துக்கள்			
ஆதனம்,பொறித்தொகுதி, உபகரணம்	1	***342,006,088.38***	***343,497,339.56***
காணி		307,200,000.00	307,200,000.00
கட்டடம்		16,373,609.27	13,039,577.17
மோட்டார் வாகனங்கள்		5,875,000.00	8,707,000.00
இயந்திரமும் பொறியும்		2,177,383.41	3,371,800.00
தளபாடமும் பொருத்துக்களும்		1,346,928.26	1,328,520.00
அலுவலக உபகரணங்கள்		1,962,203.81	2,016,165.50
விவசாய உபகரணங்கள்		443,000.00	639,500.00
தோட்ட உபகரணங்கள்		200,000.00	-
பிற உபகரணங்கள்		2,146,815,.37	2,439,350.00
புகைப்பட சினிமா உபகரணங்கள்		-	3,540.00
கணினியும் பாகங்களும்		1,084,277.38	1,292,160.00
தற்காலிக கட்டடம்		2,127,987.55	2,239,986.89
அளவை உபகரணங்கள்		100,183.33	130,740.00
கட்புலனாகா சொத்து			
மென்பொருள்		968,700.00	1,089,000.00
நிதிச் சொத்து		***855,088.71***	***826,984.98***
சேமிப்பு வைப்பு		774,478.21	746,374.48
கடன்		80,610.50	80,610.50
நடப்புச் சொத்துக்கள்		***8,064,308.68***	***11,495,780.47***
வைப்புக்கள்		201,816.50	201,816.50
இருப்பு		4,874,033.32	9,609,552.48
கடன்படுநர்		979,476.77	999,476.77
முற்பணங்கள்		21,900.00	33,400.00
வருமதிகள்		317,900.51	581,768.31
கையிலுள்ள, வங்கியிலுள்ள காசு		1,669,181.58	69,766.41
மொத்தச் சொத்துக்கள்		**350,925,485.77**	**355,820,105.01**
உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்			
மூலதனமும் ஒதுக்கங்களும்		***334,367,991.14***	***343,255,663.66***
நிதிய மீதி		375,001,390.22	370,001,390.22
திரட்டு நிதியம்		(40,633,399.08)	(26,745,726.56)
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்		***10,245,455.80***	***5,426,693.20***
இளைப்பாறல் பணிக்கொடை கடப்பாடு		4,845,455.80	2,926,693.20
நடு தவணைக் கடன்		5,400,000.00	2,500,000.00
நடப்புப் பொறுப்புக்கள்		***6,312,038.83***	***7,137,748.15***
குறுங்காலக் கடன்		187,500.06	375,000.03
பிடிப்புப் பணம்		668,747.75	256,669.35

அட்டுறு செலவுகள்		5,455,791.02	6,506,078.77
மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்		**350,925,485.77**	**355,820,105.01**

விபரம்	குறிப்பு	**2015**ரூ.	**2014**ரூ.
வருமானம்		**41,753,482.54**	**50,048,316.74**
திறைசேரி/அமைச்சு மானியங்கள்		38,720,477.23	25,516,568.00
பிற செயற்பாட்டு வருமானம்	2	2,507,011.58	23,968,173.48
சேமிப்பு கணக்கு மீதான வட்டி		28,103.73	122,366.70
சொத்து விற்னைமூலம் கிடைத்த பணம்		1,773,392.00	68,383.56
சொத்து விற்னைப் பணத்தை திறைசேரிக்கு அனுப்புதல்		(1,771,892.00)	-
பிற வருமானங்கள்		496,390.00	372,825.00
செலவினம்		**55,678,542.06**	**48,126,802.63**
ஆளுக்குரிய வேதனாதிகள்		34,085,445.29	20,237,177.46
பிரயாணச் செலவுகள்		148,900.95	79,955.00
வழங்கல்களும் தேவைப்பாடுகளும்		1,257,729.96	1,669,799.53
நிலையான சொத்து பழுதுபார்தலும் பராமரிப்பும்		4,312,188.80	6,463,475.08
மாற்றல், தொடர்பாடல், பயன்பாடு மற்றும் பிற சேவை		15,874,277.06	19,676,395.56
செலவை மிஞ்சிய வருமானம்/ மிகை (குறைவு)		**(13,925,059.52)**	**1,921,514.11**

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

2015 திசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

	குறிப்பு	2015 ரூ.	2014 ரூ.
செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான /(பயன்படுத்திய) காசுப்பாய்வு			
வருமான வரிக்கு முன் தேறிய இலாபம்/நட்டம்		(13,925,059.52)	1,921,514.11
சீராக்கங்கள்			
தேய்மானம்	1	5,360,214.21	4,322,664.08
முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான வட்டி வருமானம்		(28,103.73)	(122,366.70)
இளைப்பாறல் பணிக்கொடை கடப்பாட்டுக்கான ஏற்பாடு		1,918,762.60	750,109.60
மீள்விலைமதிப்பிடல் இலாபம்/நட்டம்		-	328,671,316.14
தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன் செயற்பாட்டு இலாபம்		**(6,674,186.44)**	**335,543,237.23**
இருப்புகளில் (அதிகரிப்பு) /குறைவு		4,735,519.16	(5,134,402.52)
வியாபார மற்றும் பிற வருமதிகளில் (அதிகரிப்பு) /குறைவு		295,367.80	576,316.65
வியாபார மற்றும் பிற சென்மதிகளில் அதிகரிப்பு		(638,209.35)	(946,477.66)
செயற்பாட்டிலிருந்து உருவாக்கிய காசு		4,392,677.61	(5,504,563.53)
செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு		**(2,281,508.83)**	**330,038,673.70**

முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான/ (பயன்படுத்திய) காசுப் பாய்வு			
ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் கொள்ளல்	1	(5,527,463.03)	(7,325,206.63)
ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் மீள விலைமதித்தல்		-	(328,671,316.14)
ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் அகற்றுதல்/மாற்றுதல்		1,658,500.00	6,129,390.12
முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான வட்டி வருமானம்		-	(415,890.20)
முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான/ (பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்வு		**(3,868,963.03)**	**(330,283,022.85)**
நிதி நடவடிக்கையிலிருந்தான/ (பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்வு			
பெற்ற நிதியம்		43,720,477.23	30,516,568.00
மானியம்		(38,720,477.23)	(25,516,568.00)
முந்திய வருட சீராக்கம்		37,387.00	(5,581,822.95)
பெற்ற கடன்		3,000,000.00	-
கடன் மீள செலுத்தல்		(287,499.97)	(104,166.65)
		7,749,887.03	**(685,989.60)**
காசும் காசுக்கு சமமானவைகளில் தேறிய அதிகரிப்பு /(குறைவு)		1,599,415.17	(930,338.74)
வருட ஆரம்ப காசும் காசுக்குச் சமமானவைகளும்		69,766.41	1,000,105.15
வருட இறுதி காசும் காசுக்குச் சமமானவைகளும்		**1,669,181.58**	**69,766.41**
குறிப்பு: - A			
வங்கி மீதி		69,766.41	918,739.46
சில்லறை காசு கட்டுநிதி		-	80,214.96
கையிலுள்ள காசு		-	1,150.73
		69,766.41	**1,000,105.15**

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

2015 திசம்பர் 31இல் முடிவடைந்த வருடத்துக்கான உரிமைமூலதனத்தில் மாற்றம் பற்றிய கூற்று

	மீள்விலைமதிப்பிடல் நிதியம் ரூ.	நிதிய மீதி ரூ.	திரட்டு நிதியம் ரூ.	மொத்தம் ரூ.
01.01.2015 இல் மீதி	328,671,316.14	41,330,074.08	(26,745,726.56)	343,255,663.66
பெற்ற நிதியம்		43,720,477.23		43,720,477.23
மானியம்		(38,720,477.23)		(38,720,477.23)
முந்திய வருட சீராக்கம்			37,387.00	37,387.00
குறை ஒதுக்கீடு				
வருடத்திற்கான தேறிய மிகை(குறை)			(13,925,059.52)	(13,925,059.52)
	328,671,316.14	**46,330,074.08**	**(40,633,399.08)**	**334,367,991.14**

குறிப்பு 01

சொத்து வகுதி	காணியும் கட்டடமும்	மோட்டார் வாகனம்	பொறியும் இயந்திரமும்	அலுவலக உபகரணம்	தளபாடமும் பொருத்துக் களும	விவசாய உபகரண ம	தோட்ட உபகரண ம	பிற உபகரணம்	புகைப்பட , சினிமா உபகர ணம	தற்காலிக கட்டடம்	அளவை உபகரண ம	கணினியும் மென்பொரு ளும்	பிற முதலீடுகள்	மொத்தம்
201501.01 இல் மீதி	320,239,577.17	8,707,000.00	3,371,800.00	2,016,165.50	1,328,520.00	639,500.00	-	2,439,350.00	3,540.00	2,239,986.89	130,740.00	1,292,160.00	1,089,000.00	343,497,339.56
சேர்வனவு	4,000,000.00	-	166,980.00	340,056.28	350,826.75	-	200,000.00	174,000.00	-	-	-	295,600.00	-	5,527,463.03
அகற்றல்/ மாற்றல் (நிலையான சொத்து)	-	(1,007,000.00)	(650,000.00)	-	-	-	-	-	-	-	-	(1,500.00)	-	(1,658,500.00)
அகற்றல்/ மாற்றல் (இதுவரை தேய்விட்ட பெறுமதி)	-	1,007,000.00	650,000.00	-	-	-	-	-	-	-	-	1,500.00	-	1,658,500.00
ஆண்டுக்கான தேய்மானம்	(665,967.90)	(2,832,000.00)	(1,361,396.59)	(394,017.97)	(332,418.49)	(196,500.00)	-	(466,534.63)	(3,540.00)	(111,999.34)	(30,556.67)	(503,482.62)	(120,300.00)	(7,018,714.21)
தேறிய மீள் விலைமதித்தல்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
2015.12.31 இல் தேறிய பெறுமதி	323,573,609.27	5,875,000.00	2,177,383.41	1,962,203.81	1,346,928.26	443,000.00	200,000.00	2,146,815.37	-	2,127,987.55	100,183.33	1,084,277.38	968,700.00	342,006,088.38
மீள் விலைமதித்தல் மிகை மொத்தம்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
மீள் விலைமதித்தல் குறை மொத்தம்	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
மொத்த உச்ச பெறுமதி	324,519,357.99	7,700,000.00	2,888,780.00	2,356,221.78	1,679,346.75	639,500.00	200,000.00	2,613,350.00	3,540.00	2,239,986.89	130,740.00	1,586,260.00	1,089,000.00	347,646,083.41
திரண்ட தேய்மானம்	(945,748.72)	(1,825,000.00)	(711,396.59)	(394,017.97)	(332,418.49)	(196,500.00)	-	(466,534.63)	(3,540.00)	(111,999.34)	(30,556.67)	(501,982.62)	(120,300.00)	(5,639,995.03)

தேறிய உச்ச பெறுமதி	323,573,609.27	5,875,000.00	2,177,383.41	1,962,203.81	1,346,928.26	443,000.00	200,000.00	2,146,815.37	-	2,127,987.55	100,183.33	1,084,277.38	968,700.00	342,006,088.38

நடைமுறை அல்லாத சொத்துக்கள்

குறிப்பு 02 :வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்குகள்

2.1 **தெகிவளை விற்பனைக்கூடம்**

2015.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு

விடயம்	**2015ரூ.**	**2014ரூ.**
விற்பனை வருமானம்	**44,427,486.94**	**47,285,238.21**
கழி: விற்பனைக் கிரயம்		
ஆரம்ப இருப்பு	1,481,735.70	1,620,879.72
கொள்வனவு	36,489,702.80	38,830,172.31
போக்குவரத்து	62,060.00	60,780.00
இருப்பு சேதம்	-	-
இறுதி இருப்பு	(1,574,895.14)	(1,832,983.42)
	36,458,603.36	38,678,848.61
மொத்த இலாபம்/நட்டம்	**7,968,883.58**	**8,606,389.60**
பொதுச் செலவுகள்	6,519,382.34	6,121,579.19
தேறிய இலாபம்/நட்டம்	**1,449,501.24**	**2,484,810.41**

2.2 **நாற்று மேடை- பிரதான அலுவலகம்**

2015.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு

விடயம்	**2015 ரூ.**	**2014ரூ.**
விற்பனை வருமானம்	**7,828,601.61**	**6,378,381.02**
கழி: விற்பனைக் கிரயம்		
ஆரம்ப இருப்பு	456,182.00	403,350.00
கொள்வனவு	5,073,167.50	4,411,191.00
இருப்பு சேதம்	-	
இறுதி இருப்பு	(1,059,868.78)	(456,182.00)
	4,469,480.72	4,358,359.00
மொத்த இலாபம்/நட்டம்	**3,359,120.89**	**2,020,022.02**
பொதுச் செலவுகள்	2,012,214.42	1,708,337.83
தேறிய இலாபம்/நட்டம்	**1,346,906.47**	**311,684.19**

2.3 நாற்று மேடை- தெகிவளை

2015.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு

விடயம்	**2015 ரூ.**
விற்பனை வருமானம்	**3,417,684.50**
கழி: விற்பனைக் கிரயம்	
ஆரம்ப இருப்பு	351,247.72
கொள்வனவு	2,426,249.00
இருப்பு சேதம்	-
இறுதி இருப்பு	(126,271.80)
	2,651,224.92
மொத்த இலாபம்/நட்டம்	**766,459.58**
பொதுச் செலவுகள்	906,810.10
தேறிய இலாபம்/நட்டம்	**140,350.52**

2.4 பெருந்தோட்டப்பகுதியில் அரிசி மா பாவனையை பிரபல்யப்படுத்தும் செயற்றிட்டம்- கலன்குட்டிய

2015.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி,வியாபார,இலாப நட்டக் கணக்கு

விடயம்	**2015 ரூ.**	**2014 ரூ.**
ஆரம்ப இருப்பு	3,352,991.90	750,058.10
கொள்வனவு	454,560.73	11,307,072.72
இருப்பு சேதம்	(3,546.00)	(59,612.60)
இறுதி இருப்பு - மூலப்பொருள்	(442,681.10)	(3,352,991.90)
மூலப்பொருள் செலவு	3,361,325.53	8,644,526.32
நேர் சம்பளம்	-	1,383,456.67
போக்குவரத்து	-	20,231.42
ஆரம்ப இருப்பு - குறைவேலை	-	-
இறுதி இருப்பு - குறைவேலை	-	-
உற்பத்தி செலவு	3,361,325.53	10,048,214.41
விற்பனை வருமானம்	**665,226.03**	**14,300,287.00**
கழி: விற்பனைக் கிரயம்		

ஆரம்ப இருப்பு	67,400.00	11,204.00
உற்பத்தி செலவு	3,361,325.53	10,048,214.41
	3,428,725.53	10,059,418.41
இறுதி இருப்பு	(33,724.50)	(67,400.00)
	3,395,001.03	9,992,018.41
மொத்த இலாபம்/நட்டம்	**(2,729,775.00)**	**4,308,268.59**
பொதுச் செலவுகள்	2,540,635.19	180,347.14
தேறிய இலாபம்/நட்டம்	**(5,270,410.19)**	**4,127,921.45**

2.5 **சுவபோஷ உற்பத்தி தொழிற்சாலை - கன்னோறுவை**

2015.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி,வியாபார,இலாப நட்டக் கணக்கு

விடயம்	**2015**ரூ.	**2014**ரூ.
ஆரம்ப இருப்பு	999,592.55	458,574.00
கொள்வனவு	132,516.72	6,513,780.35
இறுதி இருப்பு - மூலப்பொருள்	(140,000.00)	(999,592.55)
மூலப்பொருளுக்கான செலவு	992,109.27	5,972,761.80
நேர் சம்பளம்	-	358,378.45
போக்குவரத்து	-	22,100.00
ஆரம்ப இருப்பு - குறைவேலை	-	-
இறுதி இருப்பு - குறைவேலை	-	-
உற்பத்திக் கிரயம்	992,109.27	6,353,240.25
விற்பனை வருமானம்	**255,544.00**	**8,493,152.50**
கழி: விற்பனைக் கிரயம்		
ஆரம்ப இருப்பு	155,950.00	10,000.00
உற்பத்திக் கிரயம்	992,109.27	6,353,240.25
	1,148,059.27	6,363,240.25
இறுதி இருப்பு	(10,000.00)	(155,950.00)
	1,138,059.27	6,207,290.25
மொத்த இலாபம்/நட்டம்	**(882,515.27)**	**2,285,862.25**
பொதுச் செலவுகள்	219,654.70	295,328.89
தேறிய இலாபம்/நட்டம்	**(1,102,169.97)**	**1,990,533.36**

2.6 ஹெல்தி புட் உணவகம்

2015.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு

விடயம்	2015ரூ.	2014ரூ.
விற்பனை வருமானம்	**14,936,207.64**	**16,395,350.08**
கழி: விற்பனைக் கிரயம்		
ஆரம்ப இருப்பு	212,587.15	-
கொள்வனவு	12,068,008.05	14,308,582.42
சம்பளம்	6,216,845.79	2,793,551.79
இறுதி இருப்பு	(237,898.50)	(212,587.15)
	18,259,542.49	16,889,547.06
மொத்த இலாபம்/நட்டம்	**(3,323,334.85)**	**(494,196.98)**
பொதுச் செலவுகள்	869,198.24	1,008,816.88
தேறிய இலாபம்/நட்டம்	**(4,192,533.09)**	**(1,503,013.86)**

2.7 மவ்போஷ செயற்றிட்டம்

2015.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி,வியாபார,இலாப நட்டக் கணக்கு

விடயம்	2015ரூ.	2014ரூ.
ஆரம்ப இருப்பு	1,681,715.46	576,998.00
கொள்வனவு	1,350,865.10	9,439,396.43
நேர் சம்பளம்	-	3,966,875.34
போக்குவரத்து	-	752,393.00
இறுதி இருப்பு - மூலப்பொருள்	(482,774.50)	(1,681,715.46)
	2,549,806.06	13,053,947.31
இறுதி இருப்பு - குறைவேலை		-
உற்பத்திக் கிரயம்	2,549,806.06	13,053,947.31
விற்பனை வருமானம்	**347,307.50**	**19,201,680.00**
கழி: விற்பனைக் கிரயம்		
ஆரம்ப இருப்பு	671,040.00	14,220.00
உற்பத்திச் செலவு	2,549,806.06	13,053,947.31
		13,068,167.31

	3,220,846.06	
இறுதி இருப்பு	(295,460.00)	(671,040.00)
	2,925,386.06	12,397,127.31
மொத்த இலாபம்/நட்டம்	**(2,578,078.56)**	**6,804,552.69**
பொதுச் செலவுகள்	**3,862,981.49**	1,323,082.08
தேறிய இலாபம்/நட்டம்	**(6,441,060.05)**	**5,481,470.61**

2.8 புத்தல கொம்போஸ்ட் செயற்றிட்டம்

2015.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி,வியாபார,இலாப நட்டக் கணக்கு

விடயம்	**2015ரூ.**	**2014ரூ.**
ஆரம்ப இருப்பு	136,460.00	-
பயிரிடும் செலவு	43,879.00	217,924.69
நேர் சம்பளம்	109,568.40	-
போக்குவரத்து	-	-
இறுதி இருப்பு - மூலப்பொருள்	-	(136,460.00)
	289,907.40	81,464.69
ஆரம்ப இருப்பு - குறைவேலை	-	-
இறுதி இருப்பு - குறைவேலை	-	-
உற்பத்திச் செலவு	289,907.40	81,464.69
விற்பனை வருமானம்	**272,885.00**	**476,090.00**
கழி: விற்பனைக் கிரயம்		
ஆரம்ப இருப்பு	42,650.00	-
உற்பத்திச் செலவு	289,907.40	81,464.69
இறுதி இருப்பு	-	(42,650.00)
	332,557.40	**38,814.69**
மொத்த இலாபம்/நட்டம்	**(59,672.40)**	**437,275.31**
	79,201.33	**280,381.43**
பொதுச் செலவுகள்		
தேறிய இலாபம்	**(138,873.73)**	**156,893.88**

2.9 பாரம்பரிய அரிசி செயற்றிட்டம்

2015.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார,இலாப நட்டக் கணக்கு

விடயம்	2015 ரூ.
ஆரம்ப இருப்பு	-
கொள்வனவு	988,703.09
போக்குவரத்து	-
இறுதி இருப்பு	(313,509.00)
	675,194.09
விற்பனை வருமானம்	**105,710.00**
கழி: விற்பனைக் கிரயம்	
ஆரம்ப இருப்பு	**-**
உற்பத்திச் செலவு	675,194.09
	675,194.09
இறுதி இருப்பு	(156,950.00)
	518,244.09
மொத்த இலாபம்/நட்டம்	**(412,534.09)**
பொதுச் செலவுகள்	1,075,732.36
தேறிய இலாபம்/நட்டம்	**(1,488,266.45)**

2.10 புத்தல பண்ணை

2015.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி,வியாபார,இலாப நட்டக் கணக்கு

விடயம்	2015 ரூ.
ஆரம்ப இருப்பு	-
பயிரிடல் செலவு	46,338.80
நேர் சம்பளம்	-
போக்குவரத்து	-
இறுதி இருப்பு - மூலப்பொருள்	-
	46,338.80

ஆரம்ப இருப்பு - குறைவேலை	-
இறுதி இருப்பு - குறைவேலை	-
உற்பத்திச் செலவு	46,338.80
விற்பனை வருமானம்	**190,656.50**
கழி: விற்பனைக் கிரயம்	
ஆரம்ப இருப்பு	-
உற்பத்திச் செலவு	46,338.80
இறுதி இருப்பு	**-**
	46,338.80
மொத்த இலாபம்/நட்டம்	**144,317.70**
பொதுச் செலவுகள்	1,161,944.24
தேறிய இலாபம்/நட்டம்	**(1,017,626.54)**

2.11 தணமல்வில பண்ணை 2015.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி,வியாபார,இலாப நட்டக் கணக்கு

ஆரம்ப இருப்பு	-
பயிரிடல் செலவு	48,120.00
நேர் சம்பளம்	-
போக்குவரத்து	-
இறுதி இருப்பு - மூலப்பொருள்	-
	48,120.00
ஆரம்ப இருப்பு - குறைவேலை	-
இறுதி இருப்பு - குறைவேலை	-
உற்பத்திச் செலவு	48,120.00
விற்பனை வருமானம்	**302,260.00**
கழி: விற்பனைக் கிரயம்	
ஆரம்ப இருப்பு	
உற்பத்திச் செலவு	48,120.00
இறுதி இருப்பு	-
	48,120.00
மொத்த இலாபம்/நட்டம்	**254,140.00**
பொதுச் செலவுகள்	869,010.37

தேறிய இலாபம்/நட்டம்	**(614,870.37)**

வியாபார, இலாப நட்டக் கணக்கு

தெகிவளை விற்பனைக்கூடம்	7,968,883.58
நாரஹேன்பிட்டி நாற்று மேடை	3,359,120.89
தெகிவளை நாற்று மேடை	766,459.58
கலன்குட்டிய அரிசி மா செயற்றிட்டம்	(2,729,775.00)
சுவபோஷ செயற்றிட்டம்	(882,515.27)
ஹெல்தி புட் உணவகம்	(3,323,334.85)
மவ்போஷ செயற்றிட்டம்	(2,578,078.56)
புத்தல கொம்போஸ்ட்	(59,672.40)
பாரம்பரிய அரிசி செயற்றிட்டம்	(412,534.09)
புத்தல பண்ணை	144,317.70
தணமல்வில பண்ணை	254,140.00
மொத்தம்	**2,507,011.58**

03. நேர் அபிவிருத்தி செலவினம் மானியங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

04. பிரதான அலுவலக நிருவாகம் பொருட்டு உறப்பட்ட சகல செலவினங்களும் திறைசேரி நிதியங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

05. திறைசேரி நிதியங்கள்

விபரம்	**வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடு2015**	**2015 உண்மையான செலவினம்**	**2015இல் திறைசேரியிடம்இருந்து பெற்ற நிதியேற்பாடு**	**சேமிப்பு/குறைவு**
மீண்டுவரும்	46,176,600.00	42,772,763.04	37,274,725.00	3,403,836.96
மூலதன	5,000,000.00	5,039,251.75	5,000,000.00	(39,251.75)
			42,274,725.00	

06. செயற்றிட்டங்கள் பொருட்டு கமத்தொழில் அமைச்சிடமிருந்து பெற்ற நிதியம் பின்வருமாறு மீண்டுவரும், மூலதன செலவினங்களாக பயன்படுத்தப்பட்டன.

விபரம்	**மூலதன**	**மீண்டுவரும்**	**மொத்தம்**
செயற்றிட்டம்	-	1,445,752.23	1,445,752.23
			1,445,752.23

07. அம்பலாந்தோட்டை பண்ணையில் அமைக்கப்பட்ட வேலி பொருட்டு செலுத்தப்படவுள்ள ரூ.3,209,728.53 தொகை தொடர்பாக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் DMR 02401-13 எனும் வழக்கு இலக்கத்தின் கீழ் விசாரிக்கப்பட்டு வருகின்றது.

கணக்காய்வு அறிக்கை - 2015

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ඒපීඑල්/ඩී/එච්සීබී/01/15/3

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2016 නොවැම්බර් 16 දින

සභාපති,

ශ්‍රී ලංකා ජාතික සාගිනි නිවීමේ ව්‍යාපාර මණ්ඩලය

ශ්‍රී ලංකා ජාතික සාගිනි නිවීමේ ව්‍යාපාර මණ්ඩලයේ 2015 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14(2)(සී) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව.

මාගේ සමාංක හා 2016 සැප්තැම්බර් 09 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

ජේ.එම්.ඩී.නයනකාන්ත

අතිරේක විගණකාධිපති

විගණකාධිපති වෙනුවට

පිටපත : 1. ලේකම් - කෘෂිකර්ම අමාත්‍යාංශය

2. ලේකම් - මුදල් අමාත්‍යාංශය

FFHC BOARD
2046
16 DEC 2016
No. 45, Kirimandala Mw., Narahenpita.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No. } ஏஜீஎல்/டீ/எச்சீபீ/ 1/15/3

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2016 செப்டெம்பர் 09

தலைவர்

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களனிதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை அதிகாரச் சட்டத்தின் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை சபையின் தலைவருக்கு 2016 யூன் 23 ஆந் திகதி வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயபூர்வமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) உப பிரிவுகளின் பிரகாரம் தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம்

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆண்டின் போது காசு உட்பாய்ச்சல் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல் ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில் செயற்பாடுகளை இனங்கண்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய ஓய்வூதியப் பணிக்கொடை ரூபா 392,864 தொகை அதிகமாக ஒதுக்கப்பட்டிருந்தது.

(இ) ஊழியர் சேமலாப நிதியத்தினதும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினதும் பங்களிப்பைக் கணிப்பீடு செய்த போது, உள்ளக படிகள் மற்றும் விஷேட படிகள் உழைப்பாகக் கருதப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது அந்த நிதியத்திற்காக முறையே ரூபா 514,373 மற்றும் ரூபா 77,156 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை 3 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 2,875,000 தொகையான கடன் பணம் மீளாய்வாண்டின் போது செலுத்தி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவிலும் ரூபா 2,687,500 தொகை செலுத்த வேண்டியிருந்தது.

(ஆ) 2011 மற்றும் 2012 ஆண்டுகளிலிருந்து முன் கொண்டுவரப்படுகின்ற ரூபா 883,015 கூட்டுத்தொகையான வியாபாரக் கடன்பட்டோர் மீதி மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட முன்னாள் வரிசை அமைச்சிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 34,233 தொகையான மீதி என்பவற்றை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 ஆம் ஆண்டு முதல் நெல் சந்தைப்படுத்தல் சபைக்குச் செலுத்த வேண்டிய செலவினமாகக் கணக்குகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 3,300,000 தொகையினைத் தீர்த்து வைப்பதற்கு சபை நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அந்த மீதி உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் நிதி விளைவுகளில் ரூபா 13,925,059 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,921,514 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 15,846,573 தொகையான வீழ்ச்சியினைக் காட்டியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் திறைசேரி நிதி ஏற்பாடு ரூபா 13,203,909 இனால் அதிகரித்திருந்த போதிலும் செயற்பாட்டு வருமானம் ரூபா 21,461,162 இனால் குறைவடைந்தமை மற்றும் ஊழியர் வேதனங்கள் ரூபா 13,848,268 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட நிதிவிளைவின் வீழ்ச்சி தொடர்பில் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது நிதி விளைவில் பற்றாக்குறையொன்று நிலவிய போதிலும், ஊழியர் சம்பளம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வைக் கவனத்தில் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 23,418,237 தொகையான பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 27,179,099 வரை அதாவது 16 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

3.2 சபைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி சபைக்கு சட்டரீதியான உரித்தற்ற காணியொன்றுக்கு 2012 ஆம் ஆண்டின் போது வேலியொன்று நிர்மாணிப்பதற்காக கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாக வெளித்தரப்பினருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. அதன் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தக்காரருக்கு பணம் செலுத்தப்படாமையினால் ரூபா 3,209,728 தொகையான நட்ட ஈட்டைப் பெற்றுக் கொள்வதற்காக அவரினால் சட்ட நிறுவனத்தின் மூலம் சபைக்கு எதிராக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி சித்தாசியொன்று அனுப்பப்பட்டிருந்ததுடன் அதற்குரிய வழக்கு விசாரணை 2016 மே 30 ஆந் திகதி வரையும் முடிவடைந்திருக்கவில்லை.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

(அ) 1973 இன் 15 ஆம் இலக்க பட்டினி ஒழிப்பு இலக்க அதிகாரச்சட்டத்தின் பிரகாரம்,

(i). சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திற்காக அரசசார்பற்ற வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முகவராண்மையிலிருந்து உதவி பெறல்

(ii). அபிவிருத்தி முன்மொழிவுத்திட்டத்தை அமுல்ப்படுத்தும் போது நிறுவனங்களுக்கும் ஏனைய சபைகளுக்கும் உதவுதல்.

(iii). கமநல மற்றும் கைத்தொழில் அபிவிருத்திக்கு தொடர்புபடுத்தப்பட்ட உத்தேச திட்டங்களுக்கு உதவி வழங்குதல், அபிவிருத்தி செய்தல், தொடர்புபடுத்துதல், மற்றும் அமுல்ப்படுத்துதல் மூலம் அரச சார்பற்ற முகவராண்மைகளுக்கு உந்துதல் அளித்தல்.

(iv). சர்வதேச பட்டினி ஒழிப்பு இயக்கம் ஏனைய சமனான வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒத்துழைத்தல் என்பன சபையின் நோக்கங்களாகும்.

(ஆ) மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக சபையினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத்திட்டம் மற்றும் அதன் செயல்முன்னேற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உள்நாட்டு உணவுப் பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கங்களுக்கு ரூபா 10,270,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டு உள்நாட்டு இயற்கை உணவை மேம்படுத்தும் மாவட்ட நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கிராமிய நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 20,976,000 செலவில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட 06 செயற்பாடுகளுக்காக நிதி ஏற்பாடு கிடைக்காமையின் காரணமாக எந்தச் செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(iii) 11 செயற்திட்டங்களில் ரூபா 220 மில்லியன் வருமானமொன்றைப் பெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 11 செயற்திட்டங்களிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 72 மில்லியன் மாத்திரமாக இருந்தது.

(iv) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 2 செயற்திட்டங்களிற்காக ரூபா 1.4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

4.2 நட்டமும் இழப்பும்

சபையினால் பயன்படுத்தப்படுகின்ற மஹாவலி அதிகாரசபைக்குரிய வாகனம் மீளாய்வாண்டில் விபத்திற்குட்பட்டமையின் காரணமாக ரூபா 133,325 தொகையான நட்டமொன்று சபைக்கு ஏற்பட்டிருந்தது.

4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 28 ஆகவும், உள்ளபடியான பதவியணியினர் 74 ஆகவும் இருந்தமையால் மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 46 ஆகும்.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி தற்காலிக, அமைய நாட்கூலி மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 03 ஊழியர்கள் ஆட் சேர்க்கப்பட்டிருந்தனர்

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபையின் நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 07 ஆந் திகதி அதாவது 37 நாட்கள் தாமதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 30 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

5.3 தீர்வு காணப்படாததுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஆம் ஆண்டில் 19 விவசாயிகளுக்கு விவசாய நிலத்திற்கு நீரிறைக்கும் இயந்திரங்களைப் பெறுவதற்கு வழங்கப்பட்ட ரூபா 80,610 கடன் தொகை மற்றும் 2011 ஆம் ஆண்டின் போது முன்னாள் உப தலைவரினால் பெறப்பட்ட சுவபோச மற்றும் மவ்போச பக்கற்றுக்களுக்காக அறவிட வேண்டிய ரூபா 64,500 தொகையினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் திருத்தப்பட்ட அதிகாரச் சட்டத்தைக் சமர்ப்பிக்குமாறு 2012 ஒக்தோபர் 01 ஆந் திகதி நடை பெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற் குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்ததுடன் அந்தக் கட்டளை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டின் போது நாரஹேன்பிட்ட விற்பனை நிலையத்தில் இடம்பெற்றிருந்த ரூபா 77,352 தொகையான காசுக் களவு தொடர்பாக குற்றப்

பத்திரிகை வரைவு மற்றும் ஆரம்ப புலனாய்வு அறிக்கை என்பன 2015 மே 05 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 08 ஆந் திகதி வரையிலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்	அவதானிப்புக்கள்
(அ) நிதி நிர்வாகம்	பாதிடப்பட்ட செலவினங்களுக்கும் உள்ளபடியான செலவினங்களுக்குமிடையே போதியளவான முரண்கள் வெளிப்படுத்தப்பட்டமையும் கடன்களைத் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையும்
(ஆ) சொத்துக்கள் நிர்வாகம்	வாகனங்கள் முறையாக கையேற்கப்படாமையும் முறையாக பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாமையும்
(இ) பதவியணியினர் நிர்வாகம்	மிகை ஊழியர் எண்ணிக்கைக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமை சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக பதவியணியினர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தமை
(ஈ) செயற்திட்ட முகாமைத்துவம்	திட்டமிடப்பட்டதன் படி செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படாமை மற்றும் செயற்திட்டதிலிருந்து நட்டம் அடைந்தமை

ஒப்பம் :- எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி